மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அக்வேரியத்தில் வைக் கிருர்கள். ஏனென்ருல் இது பெரும்பாலும் பழம்பொருளைச் சேகரித்து வைக்கும் அரும்பொருட்காட்சிச் சாலையாக இருக்கிறது. அக்வேரியத்தில் அப்படிப்பட்ட புதிய மீன் வகைகளைச் சேகரித்து வைக்கிருர்கள்.

Municipal Schools

* 207 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether the Government have any proposal or scheme to take over the schools run by the Municipalities in Tamil Nadu?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தாங்கள் நடத்தும் உயர் நிலைப் பள்ளிகளை அரசினரே ஏற்று நடத்த வேண்டும் அல்லது தனியார் பள்ளி களுக்குத் தருவது போன்று தங்களுக்கு 100 சதவிகிதம் மானியம் தர வேண்டும் என்று இம்மாநிலத்தில் உள்ள நகராட்சிகள் கேட்டுக் கொண்டன. இக்கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு முதற்கட்டமாக மிகவும் நெருக்கடியான நிதி நிலையிலிருக்கும் நகராட்சிகள் நடத்தும் 10 உயர்நிலைப் பள்ளிகளை மட்டும் 1972-73-ம் ஆண்டு முதல் ஏற்றுக்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : ஒன்றுக்கு மேற்பட்ட உயர்நிலைப்பள்ளிகளைக்கூட சில நகராட்சிகள் நடத்தி வருகின்றன. எனவே, அந்த ஒன்றுக்கு மேற்பட்ட வைகளை அரசாங்கம் எடுத்து மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலில் குறிப்பிட்டது மாதிரி, நிதி நெருக்கடி மிக அதிகமாக இருக்கிற நகராட்சிகள் நடத்தும் உயர் நிலைப்பள்ளிகளில் பத்து இப்பொழுது தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. கல்வி இயக்குநர் 25 பள்ளிகளை எடுத்துக் கொள்ளலாம் என்று பரிந்துரை செய்திருக் கிருர். இந்த ஆண்டு பத்துப் பள்ளிகளை எடுத்துக்கொள்வது என்று அரசு முடிவு செய்திருக்கிறது. திருநெல்வேலி நகராட்சி 7 உயர்நிலைப்பள்ளிகளை நடத்தி வருகிறது. அவற்றிலே ஒரு பள்ளியை இந்த ஆண்டு அரசு எடுத்துக் கொள்வது என்று தீர்மானித்திருக்கிறது. குன்னூரில் ஒரு பள்ளியையும், குடியாத்தத்தில் ஒரு பள்ளியையும், இராமநாதபுரத்தில் ஒரு பள்ளியையும், திருவள்ளூரில் ஒரு பள்ளியையும், வாலாஜாபேட்டையில் ஒரு பள்ளியையும், இராசிபுரத்தில் ஒரு பள்ளியையும், மேட்டுப்பாளையத்தில் ஒரு பள்ளியையும், சிவகாசியில் ஒரு பள்ளியையும், அருப்புக்கோட்டையில் ஒரு பள்ளியையும் ஆக, பத்து உயர்நிலைப் பள்ளிகளை இந்த ஆண்டு எடுத்துக்கொள்வது என்று அரசு திட்டமிட்டிருக்கிறது.

1972 ஆகஸ்ட் 21]

திரு. கே. எ. வகாப் : இப்படி எடுத்துக்கொள்ளப்படுகிற உயர்நிலைப்பள்ளிகள் எந்த ஆண்டிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1972-73-இல், அதாவது இந்த ஆண்டில் எடுத்துக்கொள்வதாகத்தான் திட்டமிடப்பட்டிருக்கிறது.

ரெங்கசமுத்திரம் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்

*208 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், ரெங்கசமுத்திரம் உயர்நிலைப்பள்ளி, கட்டட வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், கட்டட வசதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பரிசிலனையில் உள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, a number of elementary schools require their own buildings. At present the Panchayat Unions construct buildings and they have not been properly constructed. With two years they fall down or crack. So, may I know whether the construction of the buildings would be taken up by the Government?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஓரளவு நிதி வசதி அடிப்படையில்தான் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படுகின்றன, இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் சார்பாகக் கிட்டதட்ட 23,000 சில்லரை பள்ளிகள் இருக்கின்றன. அவற்றில் 12,000 சில்லரை பள்ளிகள் தான் நல்ல கட்டடங்களில் அமைந்திருக்கின்றன. மற்றவைகளுக்கு நல்ல கட்டடங்கள் இல்லை. அவைகளுக்கெல்லாம் கட்டடங்கள் வழங்கவேண்டும் என்பதற்காக நிதி வசதி ஆயுள் காப்புறுதிக் கழகத்தினிடமிருந்து பெறலாமா என்ற எண்ணம் இருக்கிறது. அரசுக்கு நேரடியாகக் கடன் தரும் நிலைமை ஆயுள் காப்புறுதிக் கழகத்திற்கு இல்லை. ஆகவேதான் இதற்குத் தனி வாரியம், டி.ஆர்.டி. அவர்களைப் பொறுப்பாளியாக நியமித்து, வைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு கடன் வாங்கியதற்குப் பிறகு பல பள்ளிகளுக்குக் கடன் வழங்கி பள்ளிக்கூடங்களைக் கட்டலாம் என்ற எண்ணம் அரசுக்கு இருந்து வருகிறது.